(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, பலமாடிக் கட்டிடம் எதற்காகக் கட்டப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அரசாங்க அலுவலகங்கள் வைப்பதற்காகக் கட்டப்படுகிறது.

Vedaranyam Salt Industry in Thanjavur District.

*184. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) Whether the Government are aware of the accumulation of stocks at the Vedaranyam Salt Industry in Thanjavur District in January 1973 ; and

(*b*) if so, the action taken thereon?

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேதாரண்யம்
உப்புத் தொழிற்சாலை.

திரு வ. ஈஸ்வரமூர்த்தி (திரு எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973–ஆம் ஆண்டு ஜனவரி திங்களில், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேதாரண்யம் உப்புத் தொழிற்சாலையில் இருப்பு சேர்ந்து வந்ததைப் பற்றி அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) மண்டல திட்டத்தின்கீழ், போதுமான இரயில்வே வாகன்களைப் (Wagons) பெறுவதில் உப்பு உற்பத்தியாளர்களுக்கு உப்புத்துறை உதவி செய்து வருகிறது. வாகன்களை வழங்கும் நிலைமை கணிசமான அளவுக்குச் சீராகியுள்ளது.